புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# யாப்பியல் நோக்கில் நற்றிணை
## (சிறப்பாய்வு உலோச்சனார் பாடல்கள்)

முதுமுனைவர் ப.திருஞானசம்பந்தம்,
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 004,

ஆய்வுச் சுருக்கம்

நற்றிணைப் பாடல்களின் யாப்பியற் குறித்துப் பேசும் இக்கட்டுரை, முந்தைய ஆய்வுகளின் வன்மை, மென்மைகளைச் சீர்த்தூக்கிப் பார்த்து சில புதிய முடிவுகளை முன்வைக்கின்றது. குறிப்பாக நற்றிணையில் உள்ள உலோச்சனார் பாடல்களின் (20) யாப்பியலை, பாவியல், தொடையியல் நோக்கில் நுட்பமாக விளக்குகின்றது.

முக்கிய சொற்கள்: நற்றிணை, வரைவிலக்கணம், யாப்பியல், யாப்பு வகைகள், யாப்பியற் கொள்கைகள், ஐந்திலக்கண மரபு, சங்க இலக்கிய யாப்பியல், உலோச்சனார், பாவியல், தொடையியல், எதுகை, மோனை.

> பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து யாப்பியல், இலக்கிய ஆய்வின் ஒரு பகுதியாகவும் ஒரு தனித் துறையாகவும் வளர்ந்து வந்திருக்கின்றது. இலக்கியத் திறனாளிகளும் மொழியியல் அறிஞர்களும் தமிழ் இலக்கணிகளும் வரைவிலக்கணம் (definition), யாப்பு வகைகள் (metric types), யாப்பியற் கொள்கைகள் ஆகியன பற்றி விரிவாகவும் ஆய்வு நிகழ்த்தியுள்ளனர். (அ.பிச்சை : 2011 : 15)

தமிழ் யாப்பியல் வளமான சிந்தனைப் பள்ளியைக் கொண்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கண மரபுகளில் யாப்பிலக்கண நூல்களே மிகுதி. இதைத் தொல்காப்பியம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் மூலம் அறியலாம். இந்நூல்கள் கட்டமைத்துள்ள யாப்பு வகைகள், யாப்பியற் கோட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும், இக்கோட்பாடுகளுள் அடங்காமலும், புதிய இலக்கண ஆக்கத்திற்குரிய வடிவங்களைக் கொண்டதாகவும் சங்க இலக்கியங்கள் உள்ளன.

சங்க இலக்கியங்களின் யாப்பியலை முழுமையாகவும், ஒரு குறிப்பிட்ட சங்கப் பனுவலைக் குறித்து தனியே ஆராயும் முயற்சிகளும் தமிழில் நிகழ்ந்துள்ளன. சங்க யாப்பியல் குறித்து தி.வீரபத்திர முதலியார், அ.சிதம்பரநாதனார், தமிழண்ணல், ந.வீ.செயராமன், அன்னிதாமசு, இரா.சாரங்கபாணி, சோ.ந.கந்தசாமி, அ.பிச்சை, கா.சிவத்தம்பி ஆகியோர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனர். இவர்களுக்குமுன் சங்கப் பனுவல்களை ஆராய்ந்தவர்கள் உரையாசிரியர்கள். தமிழின் பெரும்பான்மையான இலக்கியங்களைத் தமது மேற்கோள்கள் மூலம் எடுத்துக்காட்டி பன்முகப்பட்ட ஆய்விற்கு வழியமைத்துள்ளனர். இது பிறிதொரு சூழலில் தனித்து ஆய்தற்குரியது. இங்கு நற்றிணையின் உலோச்சனார் பாடல்கள் மட்டும் ஆராயப்படுகின்றன. இக்கட்டுரை வசதி கருதி பின்வரும் நிலையில் தொகுத்து கொள்ளப்படுகின்றது.

- நற்றிணைப் பாடல்களின் அமைப்பும் அதன் யாப்பும்
- உலோச்சனார் பாடல்களின் யாப்பியல் (பாவியல், தொடையியல் : எதுகை, மோனை மட்டும்)

பல்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு சங்கப் பனுவல். இப்பனுவலுள் முதலில் தொகுத்த நூல் குறுந்தொகை. இந்நூலின் சமகாலத்திலோ அதன் பின்னரோ நற்றிணை

*தொகுக்கப்பட்டுள்ளது. ச.வையாபுரிப்பிள்ளை இவ்விரு நூல்களையும் சமகாலத்தைச் சார்ந்தவை என்கிறார் (1992:187,188). நற்றிணையில் கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள நானூறு பாடல்களை 248 புலவர்கள் பாடியுள்ளனர். 192 புலவர்களின் பெயர்கள் தெரிகின்றன. 56 புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. அகவற்பாவில் பாடப்பட்ட சங்கப் பாடல்கள் அடிகளின் மூலம் தொகுக்கப்பட்டுள்ளன. நற்றிணையில் ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையுள்ள பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வடி வரையறையில் கூடுதலான அடிகள் கொண்ட (13 அடி) பாடல்களும் குறைவான அடிகள் கொண்ட (7, 8 அடிகள்) பாடல்களும் நற்றிணையுள் உள்ளன.*

*நற்றிணையின் நானூறு பாடல்களில் 234ஆம் பாடல் மட்டும் கிடைக்கவில்லை. 385ஆவது பாடலும் முழுமையாக இல்லை (7 அடிகள் மட்டும் உள்ளது). சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழி நற்றிணை முதல்பதிப்பின் (1952) பின்னிணைப்பில் (அடிக்குறிப்பு) 234ஆவது பாடல், 'இறையனார் களவியல் உரையின் 28ஆவது சூத்திரத்தில் இருந்து கிடைத்ததாக'க் குறிக்கப் பட்டுள்ளது. இறையனார் களவியல் உரையின் சி.வை.தாமோதரம் பிள்ளை பதிப்பு, கழகத்தின் இறையனாரகப் பொருள் உரைப் பதிப்புகள் (1953 & 1964) ஆகியவற்றில் தேடிப் பார்த்தபோது அப்பாடல் அங்கு உள்ளது. ஆனால் நற்றிணையைச் சார்ந்தது என்ற குறிப்பு இல்லை. நற்றிணையின் முதல் பதிப்பு (1914), ச.வையாபுரிப்பிள்ளையின் 'சங்க இலக்கியம் - பாட்டும் தொகையும்' (1940 & 1967) பதிப்பு, உ.வே.சா.நூல் நிலையப் பதிப்பு ஆகியவற்றில் 'பிரதிகளில் அகப்படா பாடலாகவே' 234ஆவது பாடல் குறிக்கப்பட்டுள்ளது. கட்டுரையாளருக்கும் இக்கருத்தே உடன்பாடு.*

*நற்றிணையின் 401 பாடல்களுள் 397 பாடல்கள் நேரிசை ஆசிரியம்; ஒரேயொரு பாடல் (நற்.134) மட்டும் மண்டில ஆசிரியம். 348ஆவது பாடல் நேரிசை ஆசிரியம், நிலைமண்டிலம் என இரு வகையாகக் கொள்ளத்தக்கது. சங்க இலக்கியங்களின் மண்டில ஆசிரியம் குறித்துப் பேசும் அ.பிச்சை, நற்றிணையில் 134ஆவது பாடல் மட்டும் மண்டில ஆசிரியமாக உள்ளது என்கிறார் (2011: 76). நற்றிணையில் மேலும் ஒருபாடல் நிலைமண்டில ஆசிரியமாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார் சோ.ந.கந்தசாமி. இவர் 348ஆவது பாடலை நிலைமண்டிலமாகக் கருதுகின்றார்.*

*நிலவே, நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பிப்*
*பால்மலி கடலின் பரந்துபட் டன்றே*
*ஊரே, ஒலிவரும் சும்மையொடு மலிதொகுபு ஈண்டின்*
*கலிகெழு மறுகின் விழவய ரும்மே*
*கானே, பூமலர் கஞலிய பொழிலகந் தோறும்*
*தாம்அமர் துணையொடு வண்டி ரும்மே*
*யானே, புனைஇழை ஞெகிழ்ந்த புலம்புகொள் அவலமொடு*
*கனைஇரும் கங்குலும் கண்படை இலனே*
*அதனால், என்னொடு பொருங்கொல் இவ்வுலகம்*
*உலகமொடு பொருங்கொல்என் அவலமுறு நெஞ்சே.* *(நற்.348)*

*இப்பாட்டில் ஈரடிக்கு ஒருமுறை நிலவே, ஊரே, கானே, யானே என்று சீர் கூனாக வந்தது. அளவடியில் சீர் கூனாக வருதல் தொல்காப்பிய இலக்கணத்தொடு பொருந்திய வழக்கே ஆகும். ஈற்றயலடியில் இடம்பெற்ற அதனால் என்ற சொல்லினைக் கூனாகக் கொள்ளின், எஞ்சியது சிந்தடி ஆகும். சிந்தடியில் சீர் கூனாதற்கு இலக்கணம் கூறப் பெறாமையின், அதனால் என்பதனை அடியுடன் இணைந்த சீராக எண்ணின் அளவடி என்பது பெறப்படும். ஆதலின், இப்பாட்டும் நிலைமண்டில ஆசிரியம் ஆகும். (சோ.ந.கந்தசாமி: 1989:593)*

*இப்பாடலின் மற்ற அடிகளில் வரும் சீர் கூனினை ஏற்கும் சோ.ந.கந்தசாமி, ஈற்றயலடியில் வரும் கூனினை மட்டும் அசைச்சீராகக் கொண்டு நிலைமண்டிலமாக்குகின்றார். இக்கருத்திற்குச் சிந்தடிகளில் கூன் வருதலில்லை என்ற தொல்காப்பிய விதியை ஆதாரமாகக் கொள்கிறார். 'அதனால்' என்ற சீரினைக் கூனாகக் கொண்டால் இப்பாடல் நேரிசை ஆசிரியம். அசைச்சீராகக் கொண்டால் மண்டில ஆசிரியம். இவ்வாறு இருவகையாகக் கொள்ளத்தக்க நிலையில் நற்றிணையின் 348ஆவது பாடல் அமைந்துள்ளது.*

*நற்றிணையில் ஏழு அடிகளில் ஒரு நேரிசை ஆசிரியமும் (கடவுள் வாழ்த்து), எட்டு (நற்.283) அடிகளில் ஒரு நேரிசை ஆசிரியமும் உள்ளன. ஒன்பது அடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியம் நூற்றைந்து[1]. பத்தடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியம் எண்பது[2]. பதினோரடிகளில்*

அமைந்த ஆசிரியம் நூற்றாறு[3]. பன்னிரண்டடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியம் எண்பது[4]. பதின் மூன்றடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியம் ஏழு[5]. சங்க இலக்கியங்களின் யாப்பிலை வரலாற்று நிலையில் ஆராய்ந்த அ.பிச்சையின் ஆய்வு முடிகளோடு கட்டுரையாளரின் ஆய்வு முடிவுகள் பல இடங்களில் ஒன்றுபட்டும் சில இடங்களில் வேறுபட்டும் அமைகின்றன.

நற்றிணையின் 9 அடி பாடல்களைப் பரிசோதித்து பார்த்ததில் பாடல் எண்களில் சில மாற்றங்கள் உள்ளன. அ.பிச்சை 209 (இரண்டு முறை), 234, 283, 326 ஆகிய பாடல்களை ஒன்பது அடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியமாகக் கருதுகின்றார். 209ஆவது பாடலை இரண்டாவது முறை குறிப்பிடும்போது பாடல் எண் அச்சுப் பிழையாய் உள்ளது. அங்கு 309 என்ற பாடல் எண் வர வேண்டும். 234ஆவது பாடல் நற்றிணையில் கிடைக்காத பாடல். 283ஆவது பாடல் எட்டிகளிலும், 326ஆவது பாடல் பத்து அடிகளிலும் அமைந்துள்ளன. ஒன்பது அடியில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்களின் பாடல் எண்களைக் குறிப்பிடுவதில் இத்தகைய சிறு மாற்றங்கள் அ.பிச்சையின் எண்ணிக்கையில் உள்ளன. இவர் நற்றிணையின் 94, 158ஆவது பாடல்களை ஒன்பது அடியில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாவாகக் குறிப்பிடவில்லை.

அ.பிச்சை 80ஆவது பாடலைப் பத்தடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியமாகக் கருதுகிறார். ஆனால் இப்பாடல் ஒன்படி அடிகளில் உள்ளது. பத்தடிகளில் அமைந்த 59ஆவது பாடலை அ.பிச்சை கணக்கில் கொள்ளவில்லை. பதினோரடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள் 106 என்கிறார் அ.பிச்சை. ஆனால் அவர் கொடுத்துள்ள பாடல்கள் எண்களைக் கூட்டிப் பார்க்கையில் 103 பாடல்கள் மட்டுமே உள்ளன (2011:217,304). பரிசோதித்து பார்த்ததில் 104 பாடல்கள் பதினோரடிகளில் உள்ளன. 59, 98 ஆகிய பாடல்கள் பதினோரடிகளில் அமைந்தவை என அ.பிச்சை குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் இப்பாடல்கள் முறையே பத்தடிகளிலும், பன்னிரண்டடிகளிலும் உள்ளன. 284ஆவது பாடல் அ.பிச்சை அவர்களின் பதினோரடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாவில் இல்லை. இப்பாடல் எண் விடுபட்டுள்ளது.

பன்னிரண்டிகளில் அமைந்த ஆசிரியப்பாக்கள் எண்பது. அ.பிச்சை 79 என்று குறிப்பிடுகின்றார் (2011:217, 304). 98ஆவது பாடலைப் பதினோரடி நேரிசை ஆசிரியப்பாவில் ஒன்றாகக் குறிப்பிட்டதால் இங்கு அப்பாடல் விடுபட்டுள்ளது. இப்பாடல் பன்னிரண்டடி நேரிசை ஆசிரியமாகும். பதின்மூன்றடிகளில் அமைந்த 7 ஆசிரியப்பாக்களின் எண்ணிக்கையில் அ.பிச்சை அவர்களின் கருத்திற்கும் கட்டுரையாளரின் கருத்திற்கு எந்த மாறுபாடும் இல்லை. இனி உலோச்சனார் பாடல்களின் யாப்பியல் குறித்து ஆராயலாம்.

உலோச்சனார் நற்றிணையில் 20 பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் 9 அடி முதல் 13 அடிகள் வரை கொண்ட நேரிசை ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன. ஒன்படிகளில் நான்கு பாடல்கள் (நற்.11, 131, 223, 278), பத்து அடிகளில் நான்கு பாடல்கள் (நற்.38, 149, 363, 398), பதினோராடிகளில் ஏழு பாடல்கள் (நற்.63, 74, 203, 249, 287, 311, 354), பன்னிரண்டிகளில் மூன்று பாடல்கள் (நற்.191, 254, 331), பதின்மூன்றடிகளில் இரண்டு பாடல்கள் (நற். 64, 372) உலோச்சனரால் பாடப்பட்டுள்ளன. இவற்றுள் பதினோரடிகளைக் கொண்ட பாடல்களையே உலோச்சனார் மிகுதியாகப் பாடியிருக்கின்றார்.

சங்கச் செய்யுட்களில் தொடைகள் இயல்பாக அமைந்து காணப்படுகின்றன. குறிப்பாக எதுகை, மோனை முதலிய தொடைகள் அடிவகை, சீர் வகை எனும் இருநிலைகளில் அமைகின்றன. தொல்காப்பியர் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, இரட்டை, நிரல்நிறை என்னும் பத்துத் தொடைகளையே குறித்துள்ளார். எனினும் பிற்கால யாப்பிலக்கணங்கள் கூறும் தொடைகளையும் சங்கச் செய்யுட்களில் காண முடிகிறது. இதனை,

> தொல்காப்பியம், பொழிப்பு, ஒரூஉ, என்ற இரண்டு தொடைப்படும் இடங்களை எதுகைக்கு மட்டும் கூறினாலும் சங்கப் பாடல்களில் பிற நான்கு தொடைகளிலும் அவை அமைகின்றன. மேலும் இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, பின், கடையிணை, இடைப்புணர் ஆகிய தொடை விகற்பங்களும் காணப்படுகின்றன. (அ.பிச்சை: 2011:296, 297)

எனும் கருத்து உறுதிபடுத்துகின்றது. சங்கப்பாடல்களின் பல்வேறு இடங்களில் அடியெதுகையும் பொழிப்பு மோனையும் மிகுதியாகப் பயின்றுவருகின்றன. ஏனைய பிற தொடைகளின் ஆட்சியினையும் சங்கப் பாடல்களில் காண முடிகின்றது. இச்சங்கப் பாடல்களில் தொல்காப்பியர் கூறிய தொடை வகைகளும் பிற்கால இலக்கணங்கள், உரைகள் கூறும் தொடைவகைகளும்

*பரவலாகக் காணப்படுகின்றன. இவ்வகையான தொடைநலன்களைச் சங்கப் புலவர்கள் கவிதை உணர்ச்சியையும் கருத்தையும் கற்பனை வளத்தையும் சிதைக்கா வகையில் இயல்பாகவே படைத்தளித்துள்ளனர்.*

> *பண்டைய தமிழ்ப் புலவர்கள் கவிதையில் உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் சிறப்பான முதலிடமும், ஒலி நயத்திற்கும் யாப்பியற்கும் இரண்டாம் இடமும் எதுகை முதலியவற்றிற்கு மூன்றாம் இடமும் கொடுத்துக் கவிதைக் கலையை வளர்த்தனர் என்பதைப் பண்டைக் கவிதைகளைப் படித்துச் சுவைப்பவர்கள் எளிதில் உணர்வர். இடைக்காலப் பிற்காலப் பாடல்களிலுள்ள அளவு, எதுகை, மோனைகள் சங்க இலக்கியப் பாடல்களில் இல்லாமையிலிருந்தே இதைத் தெளிவாக உணரலாம். (ந.சுப்புரெட்டியார்: 1961: 232)*

*என ந.சுப்புரெட்டியார் பதிவு செய்திருக்கின்றார்.*

> *சங்கப் புலவர்கள் இடைக்காலக் கவிஞர்களைப் போன்று தொடையழகிற்கு முதலிடம் கொடுக்காமல் பொருளுக்கும் ஓசைக்கும் உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் சிறப்பிடம் தந்து இவற்றுக்குத் துணைபோகும் முறையில் தொடைகளைக் கையாண்டனர்.*
> *(அ.பிச்சை: 2011: 296,297)*

*என்று அ.பிச்சை பதிவுசெய்துள்ளமையும் மேற்கூறிய கருத்திற்கு அரணாக அமைகின்றது. தொல்காப்பிய மரபை அடியொற்றிச் சங்க இலக்கியத்தின் நாற்சீர் அடிகளில் அமைகின்ற தொடைகளின் அமைப்பைத் தி.வே.கோபாலையர் விரிவாக ஆராய்ந்துள்ளார். இவரது ஆய்வு முடிபுகள் மூலம் சங்க இலக்கியத் தொடை அமைப்புகளில் முந்தைய மரபுகள் அமைந்திருப்பதையும் பிந்தைய மரபுகளுக்குரிய அடிப்படையான கூறுகள் ஆட்சி பெற்றுள்ளமையையும் அறிய முடிகின்றது (ந.கடிகாசலம், ச.சிவகாமி (ப-ர்) : தி.வே.கோபாலையர் (கட்டுரை): 1988:10).*

*உலோச்சனார் பாடல்களின் தொடை அமைப்பிலும் மேற்சுட்டிய ஆய்வாளர்களின் கருத்து முடிவுகளைக் காண முடிகிறது. இவர் பாடிய இருபது பாடல்கள் 179 அடிகளைக் கொண்டதாக அமைந்துள்ளன. இவற்றில் அடிநிலை சார்ந்த தொடைகளும் சீர்நிலை சார்ந்த தொடைகளும் பயின்றுள்ளன. அடிநிலையில் அடிமோனை, வல்லின மோனை, வருக்க மோனை, இடையீட்டு மோனை, அடியெதுகை, உயிர்எதுகை, நெடில் எதுகை, இன எதுகை, வருக்க எதுகை, தலையாகு எதுகை ஆகிய தொடைகள் பயின்றுள்ளன. பாடலின் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒத்து வரும் அடியெதுகை 32 இடங்களில் பயின்றுவந்துள்ளது. பாடலின் அடிதோறும் முதலெழுத்து ஒத்தமையும் அடிமோனை 7 இடங்களில் மட்டுமே பயில்கின்றது. சான்றுகள் வருமாறு:*

*அடிமோனை*

> *அழுங்கல் ஊரே அறன்இன்று அதனால்*
> *அறன்இல் அன்னை அருங்கடிப் படுப்ப (நற்.63:5-6)*

*அடியெதுகை*

> *எல்லி அன்ன இருள்நிறப் புன்னை*
> *நல்அரை முழுமுதல் அவ்வயின் தொடுத்த......*
> *கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு*
> *நெடுநெறி ஒழுகை நிரைசெலப் பார்ப்போர் (நற்.354: 5-6; 8-9)*

*தொல்காப்பியர் கூறுகின்ற அடியெதுகை தொடையே உலோச்சனாரின் பாடலில் மிகுதி. நற்றிணையின் அடிவகைத் தொடைப் பயில்வினை மதிப்பிடுகையில் தொல்காப்பியரின் விதிக்கேற்பவே இத்தொடை அமைப்பு உள்ளது.*

*தொல்காப்பியர் கூறாத தொடை வகைகள் பிற்கால இலக்கண நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் கூறப்பட்டுள்ளன. மோனை, எதுகை ஒன்றுதலில் ஒரே எழுத்தே ஒன்றாமல் இனம், வருக்கம், நெடில் எழுத்துகளின் அடிப்படையில் எதுகை, மோனைத் தொடைகள் அமையும் நிலை சார்ந்து தொடை வகைகள் இலக்கணம் பெற்றுள்ளன. அவற்றுள் வல்லின எழுத்து ஒன்றிவரும் வல்லின மோனை 9 இடங்களிலும், வருக்க எழுத்துகள் ஒன்றிவரும் வருக்க மோனை 3 இடங்களிலும், நெடில் எழுத்து ஒன்றி வரும் நெடில் மோனை 3 இடங்களிலும் பயின்றுள்ளன. எதுகைகளில் இகர உயிர்எதுகை, வல்லின எதுகை, ழகர வருக்க எதுகை முறையே ஒவ்வொரு இடங்களில் மட்டும் உலோச்சனார் பாடல்களில் பயில்கின்றன.*

*நெடில் மோனை*

*நீர்அலைக் கலைஇய கூழை வடியாச்*
*சாஅய் அவ்வயிறு அலைப்ப உடன்இயைந்து*
*ஓரை மகளிரும் ஊர்எய் தினரே.............*
*யாணர் இளமுலை நனைய*
*மாண்எழில் மலர்க்கண் தெண்பனி கொளவே. (நற்.398: 3-5; 9-10)*

*வருக்க மோனை (ப, ம)*

*பொன்னின் அன்ன நறுந்தாது உதிரப்*
*புலிப்பொறிக் கொண்டபூநாறு குரூஉச்சுவல் (நற்.249:4-5)*
*மூக்கின் உச்சிக் சுட்டுவிரல் சேர்த்தி*
*மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற (நற்.149:2-3)*

வல்லின மோனை

*சுறவினம் கலித்த நிறைஇரும் பரப்பின்*
*துறையினும் துஞ்சாக் கண்ணர்*
*பெண்டிரும் உடைத்து இவ்அம்பல் ஊரே. (நற்.223:7-9)*

*இடையீட்டு மோனை*

*நறவுமகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன்..........*
*நற்றோன் நெகிழ மறத்தல் நுமக்கே. (நற்.131: 7,9)*

*இகர உயிர் எதுகை*

*கழிசூல் படரப்பை காண்ட வாயில்*
*ஒலிகா ஓலை முள்மிடை வேலிப் (நற்.38.7-8)*

*றகர வருக்க எதுகை*

*அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்*
*வறன்உற்று ஆர முருக்கிப் பையென (நற்.64:5-6)*

அடிதோறும் சீரின் முதலெழுத்து அளவொத்து அமைய, இரண்டாம் எழுத்து ஒன்றுவதுடன் அச்சீரிலுள்ள முதலெழுத்தினைத் தவிர்ந்த பிற அனைத்து எழுத்துகளும் ஒன்றியமைவது தலையாகு எதுகையாகும். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய 'யாப்பு நூல்' இதற்கு இலக்கணம் வகுத்துள்ளது.

*முதற்சீர் அனைத்தும் இரண்டெழுத் தோடு*
*முழுச்சொல் ஒப்பே எழிற்பாட் டாகும். (யாப்.நூ. 43)*

இத்தலையாகு எதுகை அமைப்பு உலோச்சனாரின் பாடலில் பயின்றுவந்து எழிற் பாட்டாக அமைகின்றது.

*நாமம் முதலை நடுங்குபபை அஞ்சான்*
*காமம் பெருமையின் வந்த ஞான்றை (நற்.287:6-7)*

சீர்நிலையில் பயிலுகின்ற மோனை அமைப்பில் தொல்காப்பியர் கூறும் பொழிப்பு, ஒரூஉத் தொடைகளில் பொழிப்பு மோனையே பரவலாக இடம் பெறுகின்றது. இதற்கு அடுத்து ஒரூஉ எதுகையும் பயின்றுள்ளது. பொழிப்பு மோனை ஒரு சில அடிகளில் தொடர்ந்தும், விட்டுவிட்டும் பயிலுக்கின்ற தன்மையை உலோச்சனாரின் பாடல்களில் (நற். 354, 372) கண்ணுற முடிகின்றது.

*வள்இதழ் நெய்தல் வருந்த மூக்குஇறுபு*
*அள்ளல் இருஞ்சேற்று ஆழப் பட்டெனக்*
*கிளைக்குருகு இரியும் துறைவன் வளைக்கோட்டு*
*அன்ன வெண்மணற்று அகவயின் வேட்ட*
*அண்ணல் உள்ளமொடு அமர்ந்துஇனிது நோக்கி*
*அன்னை உள்ளமொடு அமர்ந்துஇனிது நோக்கி*
*அன்னை தந்த அலங்கல் வான்கோடு*
*உலைந்தாங்கு நோதல் அஞ்சி அடைந்ததற்கு*
*இனையல் என்னும் என்ப மனைஇருந்து*
*கண்டல் வேலிக் கழிநல் ஊரே. (நற். 372:3-13)*

இப்பாடலில் பொழிப்பு மோனையும் ஒரூஉ எதுகையும் பயின்று பாடலின் ஓசையை கூட்டுகின்றன.

*ஒரூஉ மோனை (1, 4)*

*இடிக்குரல் புணரிப் பௌவத்து இடுமார்...*
*சிறுவீ ஞாழல் பெருங்கடற் சேர்ப்பனை...*
*கொண்டல் அசைவளி தூக்குதொறும் குருகின் (நற்.74:2,5,8)*

தொல்காப்பியர் கூறாத பிற்கால யாப்பிலக்கண நூல்கள் அதன் உரைகள் முன்வைக்கும் இணை *(1, 2)*, கூழை *(1,2, 3)*, மேற்கதுவாய் *(1,3,4)*, கீழ்க்கதுவாய் *(1,2,4)*, முற்று *(1,2,3,4)*, கடையிணை *(3,4)*, பின் *(2,4)*, இடைப்புணர் *(2,3)*, இடையீட்டு (அடிகளில் *1,3)* நெடில் போன்ற தொடைகளின் பயில்கையும் உலோச்சனாரின் பாடல்களில் காண முடிகின்றது.

*இணை : ஓகை உணமர் வருபதம் நோக்கில் (நற்.331:2)*
*சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி (நற்.149:1)*
*கூழை : விழிவுநாறு விளங்குஇணர் விரிந்துஉடன் கமழும்*
*அறன்இல் அன்னை அருங்கடிப் படுப்ப (நற்.63: 4, 6)*
*திண்திமிழ் எண்ணும் தண்கடற் சேர்ப்ப (நற்.331:8)*
*மேற்கதுவாய் : அருமான் மொக்குளின் அரும்புவாய் அமிழப் (நற்.278:2)*
*சிறுகுடிப் பாக்கத்து மறுகுபுரை மறுக்கும் (நற்.203: 6)*
*கீழ்க்கதுவாய் : பொன்னின் அன்ன ததுபடு பன்மலர் (நற்.278: 3)*
*முற்று : உவர்விளை உப்பின் உழாஅ உழவர் (நற்.331:1)*
*கடையிணை: நெய்கனி பசுங்காய் தூங்கும் துறைவனை (நற்.278: 5)*
*பாட்டம் பொய்யது பரதவர் பகர (நற்.38:2)*
*கடைக்கூழை : கானல்அம் சிறுகுடிச் சேந்தனை செலினே (நற்.254: 12)*
*இடைப்புணர் : கௌவை ஆகின்றது ஐய நின்நட்பபே (354:11)*
*நல்எயில் உடையோர் உடையம் என்னும் (287: 3)*
பின் *: எந்தை திமில்இது நுந்தை திமில்என (நற்.331:6)*
*எல்லி அன்ன இருள்நிறப் புன்னை (நற்.354: 5)*

பிற்கால யாப்பிலக்கணிகள் கூறும் கடையிணை மோனை உலோச்சனாரின் *311*ஆவது பாடலின் மூன்றடிகளில் தொடர்ந்து அமைந்திருப்பது தனித்துச் சுட்டத்தக்கது *(நற்.311:4-6)*. இவ்வகையான தொடை பயில்வுகள் பிற்கால யாப்பிலக்கண நூல்களின் இலக்கண ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

தொல்காப்பியமும் அதற்குப் பின்னெழுந்த இலக்கண நூல்களும் அதன் உரைகளும் கூறாத புதிய மோனை அமைப்பு ஒன்றுள்ளது. இம்மோனை இலக்கியங்களில் சுட்டத்தகு நிலையில் இடம்பெற்றுவந்துள்ளது. இதனைக் கூர்ந்து நோக்கிய சி.வை.தாமோதரம் பிள்ளையும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் தத்தம் இலக்கண நூல்களில் வெவ்வேறு பெயர்களில் இவ்வமைப்பினைச் சுட்டி இலக்கணம் வகுத்துள்ளனர். சி.வை.தாமோதரம் பிள்ளை 'கட்டளைக் கலித்துறை' நூலில் 'சொல்மோனை' என்றும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தமது 'அறுவகை இலக்கண'த்தில் 'சொல்நடுவுறு மோனை' என்றும் பெயரிட்டு வழங்கியுள்ளனர். அடியில் உள்ள சீரின் முதலில் மட்டுமன்றிச் சீரினுள் இடம்பெறும் சொல்லின் முதலிலும் மோனை ஒன்றிவரும். அவ்வாறு வருதலும் ஒலியழகினை நல்கும் என்ற கருத்தில் இக்கூறு *19*ஆம் நூற்றாண்டில் இலக்கணம் பெற்றுள்ளது.

*இந்நீர் ஆகலோ இனிதால் எனின்இவள் (நற். 223:1)*
*புலவுமீன் உணங்கல் படுபுள் ஓம்பி (நற்.331:4)*

இவ்வமைப்போடு மேலும் இலக்கணம் வகுக்கும் வகையில் ஒரே அடியில் உள்ள சீரின் முதலிலும் அச்சீரின் நடுவிலும் மோனை பயின்றுவருகின்ற சொல்மோனை உலோச்சனாரின் பாடல்களில் சிறுவரவாக இடம்பெறுகின்றது.

*பிறர்பிறர் அறிதல் யாவது*
*தமர்தமர் அறியாச் சேரியும் உடைத்தே. (நற்.331:11, 12)*

இத்தொடை பயில்வுகள் இன்றுவரை இலக்கண வரையறையைப் பெறவில்லை.

தொகுப்புரை

- யாப்பியல் நோக்கில் நற்றிணையின் பாடல்களைத் தொகுத்து ஆராய்ந்ததில் தொல்காப்பியரின் இலக்கண வரையறைக்கான சான்றாகவே நற்றிணையின் பாடல்கள் உள்ளன. (சங்க இலக்கிய யாப்பியல்) நற்றிணையின் யாப்பியல் குறித்து அ.பிச்சை

*அவர்கள் விரிவாக ஆராய்ந்த போதிலும், அவற்றுள் மறுஆய்விற்குரிய கூறுகள் இருப்பதை இக்கட்டுரையின் வழிப் பெற முடிந்தது.*

- *உலோச்சனாரின் 20 பாடல்களை எடுத்துக்கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தியதில் இவர் பாடல்கள் தொல்காப்பியரின் இலக்கண ஆக்கத்திற்கான இலக்கியமாகவே அமைகின்றன. இதே நிலையில் பிற்கால இலக்கணிகளின் இலக்கண ஆக்கத்திற்குரிய அடிப்படைகளை நற்றிணையின் உலேச்சனார் பாடல்கள் கொண்டிருப்பதையும் கட்டுரையாளரால் பெற முடிந்தது. உலேச்சனாரின் பாடல்களைப் பாவியல் தொடையியல் என்ற இருநிலைகளில் பகுத்து ஆராய்ந்ததில் பின்வரும் முடிபுகள் கிடைத்தன.*
- *முற்கால யாப்பியல் மரபை அடியொற்றி இலக்கண விதிகளுக்கு இலக்கியம் என்ற நிலையிலும், பிற்கால யாப்பியல் மரபை அடியொற்றிப் புதிய இலக்கண விதிகள் உருவாக்கதிற்கு முதன்மை என்ற நிலையிலும் நற்றிணையின் பாவியல் தொடைநலன்கள் (உலோச்சனார் பாடல்கள்) அமைகின்றன.*
- *உலோச்சனார் பாடல்களில் பயிலும் அடிநிலை, சீர்நிலைத் தொடைகளைத் தொகுத்து ஆராய்ந்ததில் தொல்காப்பியர் கூறும் அடிவகைத் தொடைகளும் (அடிமோனை, அடியெதுகை), சீர் எதுகைத் தொடைகளும் (பொழிப்பு, ஒரூஉ) மிகுதியாக ஆட்சிப் பெற்றுள்ளன. இதன்மூலம் தொல்காப்பிய இலக்கணத்திற்குரிய இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்வது உறுதியாகின்றது.*
- *தொல்காப்பியர் கூறாது, பிற்கால யாப்பிலக்கணிகள், உரைகாரர்கள் கூறும் அடிவகைத் தொடைகளும் (வருக்கம், இனம், நெடில், சொல் (அ) சீர்நடுவுறு, தலையாகு), சீர்வகைத் தொடைகளும் (இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, கடை, இடைப் புணர், பின்) குறிப்பிடத்தக்க நிலையில் உலோச்சனார் பாடல்களில் பயின்றுள்ளன. இத்தொடைகளின் பயில்வுகள் பிற்கால இலக்கண ஆக்கத்திற்குரிய அடிப்படைத் தரவுகளைக் கொண்டவையாக உலோச்சனார் பாடல்கள் உள்ளதையும் அறிய முடிகின்றது.*

குறிப்புகள்

1. *ஒன்பதடியில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள் 105 வருமாறு : 1, 3, 5, 7, 10, 11, 13, 19, 23, 24, 26, 28, 32, 36, 48, 65, 70, 76, 80, 83, 86, 87, 88, 92, <u>94,</u> 97, 101, 102, 106, 108, 112, 124, 127, 129, 131, 135, 136, 152, <u>158</u>, 165, 170, 175, 180, 184, 188, 190, 193, 195, 196, 209, 210, 211, 217, 223, 225, 226, 227, 228, 231, 332, 233, 247, 248, 253, 264, 265, 266, 268, 269, 274, 275, 278, 282, 286, 289, 290, 291, 292, 293, 294, 295, 296, 299, 301, 309, 312, 318, 324, 325, 327, 334, 351, 356, 359, 361, 365, 371, 373, 374, 375, 377, 382, 383, 394, 397.*
2. *நற்றிணையில் பத்தடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள் 101 பின்வருமாறு : 2, 8, 12, 15, 18, 30, 38, 41, 49, 56, 57, 59, 61, 62, 68, 75, 79, 81, 95, 99, 105, 107, 109, 111, 134, 137, 139, 143, 144, 149, 153, 155, 156, 157, 160, 166, 169, 172, 173, 177, 178, 179, 182, 186, 187, 189, 194, 212, 219, 220, 222, 230, 235, 236, 237, 240, 242, 246, 250, 257, 259, 260, 261, 262, 263, 272, 273, 276, 280, 288, 302, 304, 305, 307, 316, 317, 320, 321, 326, 332, 337, 340, 341, 342, 343, 345, 348, 349, 350, 357, 362, 363, 368, 381, 386, 388, 391, 395, 398, 399, 400).*
3. *பதினோரடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள் 104 பின்வருமாறு: 6, 14, 16, 20, 22, 29, 34, 37, 39, 45, 46, 47, 50, 51, 52, 53, 54, 58, 60, 63, 66, 71, 72, 73, 74, 78, 82, 85, 89, 96, 103, 115, 117, 118, 119, 122, 128, 132, 133, 138, 140, 142, 145, 146, 150, 164, 167, 168, 171, 174, 176, 183, 199, 200, 202, 203, 205, 206, 213, 216, 218, 224, 229, 238, 243, 244, 249, 251, 255, 256, 258, 270, 279, 281, 284, 285, 287, 297, 306, 308, 310, 311, 313, 319, 323, 328, 329, 330, 335, 336, 346, 347, 353, 354, 355, 360, 369, 370, 384, 387, 389, 390, 392, 396).*
4. *பன்னிரண்டடிகளில் அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள் 80 பின்வருமாறு: 4, 9, 17, 21, 25, 27, 31, 33, 35, 40, 42, 43, 44, 55, 67, 69, 77, 84, 90, 91, 93, 98, 100, 104, 113, 114, 116, 120, 121, 123, 125, 126, 130, 141, 147, 148, 151, 154, 159, 161, 162, 163, 185, 191, 192, 197, 198, 201, 204, 207, 208,*

*214, 215, 239, 241, 245, 252, 254, 267, 271, 277, 298, 300, 303, 314, 315, 322, 331, 333, 338, 339, 344, 352, 358, 364, 366, 367, 376, 378, 380).*

5. பதின்மூன்றடிகளில் அமைந்த ஆசிரியப்பாக்கள் *7* பின்வருமாறு: *64, 110, 181, 221, 372, 379, 393.*

துணைநின்ற நூல்கள்


*1883* *இறையனாரகப் பொருள்,* மதுரைக் கடைச்சங்கத்துக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்டருளிய உரையொடு யாழ்ப்பாணம் சி.வை.தாமோரம்பிள்ளையால் பலதேசப் பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்தது, தி.குமாரசாமிச் செட்டியரால் பதிப்பிக்கப்பட்டது. சென்ன பட்டணம்.

*1915* *எட்டுத்தொகையில் ஒன்றாகிய நற்றிணை,* பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் அவர்கள் எழுதிய உரையுடன், சைவவித்தியா நுபாலனயந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது, சென்ன பட்டணம்.

*1952* *எட்டுத்தொகையில் ஒன்றாகிய நற்றிணை நானூறு மூலமும் - உரையும்,* பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் அவர்கள் எழுதிய உரையுடன், முதற்பதிப்பு (கழகவழி), சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

*1961* ந.சுப்புரெட்டியார், *கவிதையனுபவம்,* கழகம், முதற்பதிப்பு, சென்னை.

*1964* *களவியல் என்ற இறையனார் அகப்பொருள்,* தெய்வப்புலமை நக்கீரர் அருளிய உரையுடன், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதற் பதிப்பு *1953).*

*1967* எஸ்.வையாபுரிப்பிள்ளை (தொகுப்பும் பதிப்பும்), *சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்),* பாரிநிலையம், சென்னை (முதற்பதிப்பு,*1949).*

*1981* த.சரவணத் தமிழன், *யாப்பு நூல் (பாவும் உரையும்),* இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

*1989* சோ.ந.கந்தசாமி, *தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம் - முதற்தொகுதி,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

*1991* வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், *அறுவகையிலக்கணம்,* பதிப்பும் உரையும்: ப.வெ.நாகராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

*1992* எஸ். வையாபுரிப்பிள்ளை, *வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம் முதல் தொகுதி இலக்கியச் சிந்தனைகள்,* இன்ஸ்டிடியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ், இரண்டாம் பதிப்பு, சென்னை (முதல் பதிப்பு, *1989).*

*1997* *நற்றிணை மூலமும் உரையும்,* வித்துவான் *H.*வேங்கடராமன் (ப.ஆ), மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

*1998* ந.கடிகாசலம், ச.சிவகாமி (பதிப்பாசிரியர்கள்), *சங்க இலக்கியம் - கவிதையில் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, சென்னை.

*2005* சி.வை.தாமோதரம் பிள்ளை, *கட்டளைக்கலித்துறை,* ஆய்வும் பதிப்பும்: ய.மணிகண்டன், விழிகள் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை.

*2011* அ.பிச்சை, *சங்க இலக்கிய யாப்பியல்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு, சென்னை.


********* ********* ********** ********* ********* ********** ********** **********